மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஆற்றல் மிக்க முதலமைச்சராக இந்தியாவிற்கே ஒரு வழிகாட்டியாகத் திகழ்ந்து கொண்டிருக்கிற நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே தான் 10 ஆயிரம் வாகனங்கள் பதிவு செய்தாலே பகுதி அலுவலகம் திறக்கப்பட வேண்டுமென்று நாம் முடிவு செய்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே தான் இதை ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். எதிர்காலத்தில் மிக விரைவிலே குளித்தலையிலே பகுதி அலுவலகம் திறக்கப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி தெரி வித்துக் கொண்டு விரைவிலே குளித்தலையிலே திறப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு செய்ய முற்படுவார்களா என்பதை அறிய விரும்பி அமர்கிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வு முடிந்த உடனேயே அந்தப் பணிகள் துவக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 127, திரு. என். ஆர். சிவபதி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

127—

காட்டுப்புத்தூரிலிருந்து சென்னைக்கு திருவள்ளுவர் போக்கு வரத்துக் கழகப் பேருந்து விடுதல்.

*9793—திரு. என். ஆர். சிவபதி : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொட்டியம் தொகுதி, காட்டுப்புத்தூரிலிருந்து சென்னைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் புதிய பேருந்து இயக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் துவங்கப்படும் ?

1993 மார்ச் 18]

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். ஆர். சிவபதி : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுப்புத்தூரிலிருந்து சென்னைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து விடப்படுமானால் ----அந்தப் பகுதியிலே அதிகமான பேருந்து வந்து செல்லக்கூடிய இணைப்புப் பேருந்து நிலையமாக அது அமைந்திருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல் குறிப்பாக, மோகனூர், நாமக்கல், வலையப்பட்டி, வேலூர், கரூர் ஆகிய இடங்களிலிருந்து பேருந்து வந்து செல்லக் கூடிய இடமாக இருப்பதனாலும், நல்ல இணைப்பு பேருந்து நிலையமாக இருப்பதனாலும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை விட்டால் அதிகப் பயணிகள் சென்னைக்கு வருவதற்கு ஏதுவாக இருக்கும். இரண்டு தினங்களுக்கு முன்புகூட எனது தொகுதியில் ஒரு புதிய வழித் தடத்தினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றார்கள். அவர்களுக்கு எனது தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவிப்பதோடு மீண்டும் இதனை மறு பரிசீலனை செய்து காட்டுப்புத்தூரிலிருந்து சென்னைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்தினை விட ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து முசிறி வழியாக காட்டுப்புத்தூர் செல்லும் தடத்தின் நீளம் 374 கி.மீ. அதே போல சென்னையிலிருந்து நாமக்கல் வழியாக காட்டுப்புத்தூர் செல்லும் தடத்தின் நீளம் 388 கி.மீ. காட்டுப்புத்தூரிலிருந்து முசிறிக்கு வரவேண்டுமென்றால் 36 கி.மீ. நாமக்கல்லுக்கு வரவேண்டுமென்றால் 25 கி.மீ. மாண்புமிகு உறுப்பினர் கேட்பது காட்டுப்புத்தூரிலிருந்து சென்னைக்குப் புதிய வழித் தடம் விடவேண்டுமென்று கேட்கிறார். சென்னைக்குப் பல்வேறு இடங்களிலிருந்து பேருந்துகளை இயக்கிக் கொண்டிருக்கின்றோம். இதுபோன்று சூழ்நிலை இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் நேற்றைய தினம் பேசுகின்றபோது சிறு சிறு குறைபாடுகளைத் தீர்ப்பதற்காக அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டினேன். காரணம், காட்டுப்புத்தூரிலிருந்து பேருந்துகளை இயக்க வேண்டுமென்றால், சென்னையில் இருந்து செல்லக்கூடிய பேருந்துகளை காட்டுப்புத்தூரில் நிறுத்துவதற்கு வேண்டிய பணிமனை

இல்லை. அங்கேயிருக்கின்ற அலுவலர்கள்கூட தங்களிடம் இருக்கும் பணத்தை வைத்துக் கொள்வதற்கு ஒரு இடம் இல்லாத சூழ்நிலையில் இருக்கிறார்கள். ஆகவேதான் இதனை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள இயலாது என்பதைக் குறிப்பிட்டேன்.

திரு. என். ஆர். சிவபதி : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் காட்டுப்புத்தூர் பகுதியிலிருந்து திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை விடுவதற்கு எவ்வளவு விதிமுறைகள் இருக்க வேண்டுமென்பதைச் சொன்னார்கள். நான் அவர்களைப் பணிவோடு வேண்டிக் கொள்வதெல்லாம், புதிய பேருந்து வழித் தடங்களை விடுவதற்கு அதிகச் சிரமங்கள் இருந்தாலும் முசிறியிலிருந்து ஒரு பேருந்து தினமும் இரவில் சென்னைக்கு வந்து கொண்டிருக்கிறது. அந்தப் பேருந்தையாவது எக்ஸ்டென்ஷன் செய்து காட்டுப்புத்தூரிலிருந்து புறப்படுவதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதையேதான் நான் குறிப்பிட்டு சொன்னேன். இவ்வளவு கிலோ மீட்டர் ஆகின்றது. அதனுடைய பயணம் இரவு நேரங்களிலே இவ்வளவு குறிப்பிட்ட வேகத்திலேதான் வரமுடியும் என்று இருக்கிறது. ஆகவேதான் சாத்தியக்கூறு இல்லை என்று சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வற்புறுத்திக் கூறுகின்ற காரணத்தினால் நம்முடைய ஒப்பற்ற தலைவியாக இருக்கின்ற தமிழக முதல்வர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் தீரன் சின்னமலைப் போக்குவரத்துக் கழகத்திலிருந்து அதை இயக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 128, டாக்டர் எம். கருப்புசாமி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்.

128—

குன்னூர் தொகுதியில் விசைத்தறி அமைத்தல்.

*10287—டாக்டர் எம். கருப்புசாமி : மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

குன்னூர் தொகுதியில் விசைத்தறி அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?